ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஆசிரியர்,
வித்துவான், திரு. R. நடேச நாயகர்
அவர்களுக்கு
அன்பளிப்பு.
10-௨-'43

ARAIMALAI ADIGAL
LI ARY

# திருமால் போற்றி அகவல்

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை
சென்னை

1943

ஓம்

சென்னை, பச்சையப்பர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்
திரு. மு. வரதராசன் அவர்கள், B. O. L.

# அணிந்துரை

ஆண்டவனை வழிபடும் முறைகளுள் சிறந்த தொன்று தூய அன்புவழிபாடே ஆகும். 'பத்தி வலையில் படுவோன் காண்க' என்று மாணிக்கவாசகர் ஆண்டவனை அறிமுகப்படுத்துகிறார்; பிறகு, 'கற்றா வின் மனம்போலக் கசிந்துருகும்' அன்பு ஒன்றே தாம் ஆண்டவனிடம் வேண்டும் வரம் என்கிறார். இத்தூய அன்பு நெறி ஓங்க வேண்டுமென்றே ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழ்கூறு நல்லுலகில் பிறந்து ஆண்டவன்பால் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' வாழ்ந்து வழிபட்டார்கள். இந்த அன்பு வழிபாடு பெருகும் வகையில் அறிஞர் செய்யும் முயற்சிகள் எத்துணையாயினும் அத்துணையும்வேண்டும்; வேண்டும்.

திருமால் போற்றி அகவல் இத்துறையில் அரிய தொண்டு ஆற்றவல்லது. இனிமையும் எளிமையும் செம்மையும் ஒருங்கே வாய்ந்த தமிழ்நடையில் அன்றோ அன்பு அரும்பி மலரும்? அதற்கு இது தக்க சான்றாக அமைந்துள்ளது. இத்தகைய நல்லுதவியைத் தமிழ் நாட்டிற்குச் செய்த தமிழறிஞர் திரு. கா. அ. ஷண்முக முதலியாரவர்களின் நன்றியைப் போற்றுதல் நம் கடமை.

மு. வரதராசன்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# திருமால் போற்றி அகவல்

## ஆண்டாள் துதி

மாலை புனைந்தளித்து மால்கொண் டுகந்ததிரு
மாலை மணந்து மலர்வாய்பா - மாலை
அளித்தாள் துதிப்பாம் அளியினங்கள் தேனில்
குளித்தார் மருமலர்கைக் கொண்டு.

## ஆண்டாள் திருமொழி

இன்றுவந்து இத்தனையும் அமுது செய்திடப் பெறில்நான்
ஒன்று நூறாயிரமாக்கொடுத்துப் பின்னும்ஆளும்செய்வன்
தென்றல் மணங்கமழும்திரு மாலிருஞ் சோலை தன்னுள்
நின்ற பிரான்அடி யேன்மனத் தேவந்து நேர்படிலே.

## நேரிசையாசிரியப்பா

சீரார் துளவத் தாராய் போற்றி
ஆரா அமுதே அரியே போற்றி
மாதவா போற்றி மாயா போற்றி
சீதரா போற்றி செல்வா போற்றி
மீன மாய்மறை மீட்டாய் போற்றி
ஏன மாய்நிலம் இடந்தாய் போற்றி
மலையுள் மூழ்கா வண்ணம் காக்க
அலையுள் ஆமை ஆனாய் போற்றி

மூவா மருந்து முதல்வர்க் கருளிய
தேவா போற்றி **திருமால் போற்றி**
தொட்ட இடந்தொறும் தோன்றுவை என்ன
வட்டத் தூணிடை வந்தாய் போற்றி
வாமனா ஆயிரம் நாமனே போற்றி
பூமகள் புவிமகள் புணர்ந்தாய் போற்றி
தேவர்கள் மகிழச் சேவடி இரண்டால்
மூவுல களந்த முதல்வா போற்றி
போர்மழுக் கொண்ட புனிதா போற்றி
வார்சிலை தாங்கிய மன்னா போற்றி
கலப்பை எஃகம் கரத்தில் கொண்ட
உலப்பில் சீர்த்தி உடையாய் போற்றி
குழல்கொண் டூதும் குழகா போற்றி
கழல்தொழும் அடியார் கருத்தா போற்றி
கலியுக மதனில் கற்கியாய்த் தோன்றி
நலியுகச் செய்யும் நாதா போற்றி
வீசலைப் பள்ளி மேவுதல் நீங்கி
மாசிலை ஒன்றே மலர்க்கைத் தாங்கும்
கோசலை செல்வக் குமரா போற்றி
பாசிலை ஒத்த படிவம் போற்றி
எண்ணருந் தவத்தோன் யாகம் முற்றுறக்
கண்ணிணை இமையெனக் காத்தாய் போற்றி
சிலையைப் பெண்ணாச் செய்தாய் போற்றி
மலையைப் பொருவில் வளைத்தாய் போற்றி

தந்தை தருவரம் தவறா வண்ணம்
சந்த மணிமுடி தவிர்ந்தாய் போற்றி
ஏழை வேடனை எம்பிநீ என்னத்
தோழமை கொண்ட தோன்றல் போற்றி
ஆயிரம் இராமர் சேரினும் ஆமோ
தாயினும் அன்பு தழைத்தநின் நிகரென
அம்பி கடாவும் அன்பன் புகழ்ந்த
தம்பியைப் பெற்ற நம்பீ போற்றி
கானெறி காட்டிக் கனிதரும் சபரி
வானெறி எய்த வைத்தாய் போற்றி
கானம் மறைந்துறை கதிரவன் சேயை
வானரர்க் கரசாய் வைத்தாய் போற்றி
அக்கரம் எட்டும் ஆனாய் போற்றி
சக்கரம் கதைவாள் சங்கம் சார்ங்கம்
ஐம்படை கொண்ட அத்தா போற்றி
கொம்பர் மரமேழ் கோத்தாய் போற்றி
விலங்காத் திறங்கொள் மிதிலைத் தெய்வம்
இலங்கா புரியில் இருக்கக் கண்டுரை
வாகார் அஞ்சனை மகனுக் கென்றும்
சாகா நல்வரம் தந்தாய் போற்றி
பகைவன் தம்பி எனாது பணிந்து
புகல்புகுந் தவனைப் புரந்தாய் போற்றி
அலைகடல் வற்ற அம்பினைத் தொடுத்துச்
சிலையால் அணையைச் செய்தாய் போற்றி

ஆவிக் காவி ஆகிய அரும்பெருந்
தேவியைக் கவர்ந்த தீயோன் படைகள்
யாவும் அழிந்துள் ஏங்கிட நாளை
வாவென் றருளிய வள்ளால் போற்றி
கானம் போகெனக் கழன்ற தாயின்
ஊனச் சாபம் ஒழித்தாய் போற்றி
அடிமலர் அதனை அனுமன் தாங்கக்
கடிமலர்க் குழலி இடப்புறம் வைகப்
பரதன் வெண்குடை பரிந்து கவிக்க
இருவரும் கவரிகள் மருங்கெதிர் வீசப்
புடைநின் றங்கதன் உடைவாள் ஏந்த
நடையன மங்கை நல்லார் கணங்கள்
பல்லாண் டிசைக்க நல்லியம் முழங்க
மல்லார் தடந்தோள் மன்னர்கள் வணங்க
முனிவர் குழாங்கள் நனிமிக வாழ்த்த
இனிய மலர்மழை வனிதைய ரோடுந்
தேவர்கள் பொழியப் பாவலர் பாட
நாவலர் புகழ யாவரும் மகிழக்
கோமுனி வசிட்டன் கொண்டு சூட்டிய
மாமுடி புனைந்த வாழ்வே போற்றி
தந்தை தாயின் தளைசிறை நீங்கப்
பந்த மகவாய் வந்தாய் போற்றி
ஒருத்தி மகனாய்ப் பிறந்தோ ரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்தாய் போற்றி

பேய்முலை உண்ட சேயே போற்றி
காய்விடப் பாம்புப் பாயாய் போற்றி
தாயென எடுத்தணை சேயிழை யார்கள்
வாயமு துண்ட மதலாய் போற்றி
பூட்டிய தாள்கள் பூட்டி விளங்க
மாட்டுயர் உறிமேல் வைத்த வெண்ணெய்
ஏட்டொடு பாலும் இறுகிய தயிரும்
வேட்டுக் கவர்ந்துணல் விழைந்தாய் போற்றி
கருதவும் தொழவும் அரியாய் போற்றி
மருதிடைத் தவழ்ந்த மாலே போற்றி
மாயக் கன்றால் மாய விளவெறி
ஆயர் தங்குல அரசே போற்றி
கன்றும் ஆகிக் காளையர் ஆகிச்
சென்றே உலாவிய சேவடி போற்றி
அச்சம் அடைசிறார் மெச்சிக் களிக்க
நச்சர வின்மேல் நடித்தாய் போற்றி
பொன்னியல் ஆடை புனைந்தாய் போற்றி
கன்னியர் ஆடை கவர்ந்தாய் போற்றி
மலையைக் குடையா மதித்தாய் போற்றி
அலையில் இலையில் அமர்ந்தாய் போற்றி
முதலும் முடிவுமில் முகுந்தா போற்றி
பதினா யிரவர் பதியே போற்றி
மன்னர் குழாங்கள் வலிதொலைந் தோட
முன்னர்ப் பொருத மொய்ம்புடை மலைநிகர்

விடையேழ் வெருவிட வென்றுநப் பின்னைதன்
தொடையல் புனைந்த தோளாய் போற்றி
பெருக்கத் தோள்வலி பெற்ற வாணன்
செருக்கை ஒழித்த செம்மால் போற்றி
நான நறுங்குழல் நங்கை துருபதை
மானம் காக்கென மன்னர் அவையில்
ஈனதுச் சாதனன் இளைத்துச் சோர
வானம் அளாவிய வரைபோல் குவிய
அஞ்சு வண்ணத் தளவில் பலவிதக்
கஞ்சனை யளித்த கண்ணா போற்றி
தூவியல் ஐவர் தூதா போற்றி
மேவிய விதுரன் விருந்தே போற்றி
பார்த்தன் தேருறு பாகா போற்றி
சேர்த்தப் பகலிராச் செய்தாய் போற்றி
மருக்கமழ் அளகம் முருக்கிதழ்ச் செவ்வாய்
திருக்கிளர் செவ்வி உருக்கு மணிமுதல்
பண்வளர் கிளவிப் பட்ட மங்கையர்
எண்மர் மனமும் கண்ணும் கவர்ந்து
விலகுவில் உமிழ்மணி இலகுபொன் தவிசில்
கொலுவீற் றிருக்கும் கோலம் போற்றி
குஞ்சரம் காத்த கோவே போற்றி
அஞ்சன வண்ணத் தரியே போற்றி
காய்சரு காதியும் கடிந்தருந் தவஞ்செய்
சேய்துரு வற்கருள் செய்தாய் போற்றி

அண்டமும் விசும்பும் அகலிடம் எல்லாம்
உண்டுமிழ்ந் தளிக்கும் உரவோய் போற்றி
புயல்புரை மேனிப் பொன்னே போற்றி
அயனொடு தேவர்க் கரியாய் போற்றி
மங்கை தங்கிய மார்பா போற்றி
கங்கை தங்கிய கழலா போற்றி
நாரணா போற்றி நாதா போற்றி
காரணம் காலம் கடந்தாய் போற்றி
அய்யா போற்றி மெய்யா போற்றி
செய்ய தாமரைச் சீர்கழல் போற்றி
தந்தாய் போற்றி தாயே போற்றி
நந்தா இன்ப நலமே போற்றி
தூவினை யாளர் தூவினை யாகித்
தீவினை கெடுக்கும் தேவே போற்றி
பாரில் ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரில் நான்காய் நிறைந்தாய் போற்றி
தீயில் மூன்றாய்த் திகழ்கால் இரண்டாய்
காயத் தொன்றாய்க் கலந்தாய் போற்றி
ஆக்க மலரோன் ஆனாய் போற்றி
காக்கும் நல்லருட் கடலே போற்றி
ஆக்கி அளித்த அகிலம் எல்லாம்
நீக்கற் கரனாய் நின்றாய் போற்றி
ஒழிந்தவை மீள உளவாச் செய்யும்
மொழிபே ரின்ப முதலே போற்றி

கருவுடை மேகம் கஞ்ச மலர்பூத்(து)
இருசுடர் தவழ வரிவில் ஒளிர
மின்ன லோடு மிளிர்ந்த தென்னப்
பொன்மகள் தன்னுடன் பொலிவாய் போற்றி
ஒன்றாய்ப் பலவாய் உளதாய் இலதாய்
நின்றாய் போற்றி நெடியாய் போற்றி
கற்றவர் போற்றும் கலையே போற்றி
நற்றவர் வேண்டும் நலமே போற்றி
சொல்லும் ஆகிச் சொற்பொருள் ஆகிச்
சொல்லும் கடந்த தோன்றால் போற்றி
அறிவும் அறிவறி பொருளும் ஆகி
அறிதுயில் கொள்ளும் அன்பா போற்றி
உயிராய் உடலாய் ஒளிர்வாய் போற்றி
மயல்தீர் சான்றோர் மனத்தாய் போற்றி
கண்பார்ப் பதுவும் காதுகேட் பதுவும்
எண்ணம் ஆவதும் எதனால் அதுவாம்
இறையே போற்றி ஈசா போற்றி
நிறைவாய் எங்கும் உறைவாய் போற்றி
சந்ததம் அடியார் சிந்தித் ததனைத்
தந்திடும் தேவ தருவே போற்றி
பொய்கை பேயார் பூதத்தார் மழிசை
அய்யன் தொண்ட ரடிப்பொடி பாணன்
மங்கை மன்னன் மதுர கவியார்
செங்கை விற்குல சேகரன் பட்டர்கோன்

முருகூர் அலங்கல் முடித்தணி கோதை
குருகூ ராரெனக் கூறுமாழ் வார்கள்
திருவாய் மலர்ந்த செந்தமிழ் மறைகொள்
ஒருநூற் றெட்டுத் திருப்பதி தம்மிலும்[துளங்க
தொழுந்தொறும் தொழுந்தொறும் உளங்களி
எழுந்தருள் ஞானக் கொழுந்தே போற்றி
போற்றி போற்றி பொற்றாள் போற்றி
மாற்றில் பொன்னே மணியே போற்றி
திங்கள் மும்முறை மங்குல் வழங்கி
எங்கும் பயிர்கள் இனிதுறத் தழைத்து
விளைபொருள் எல்லாம் விளைந்து மல்கிக்
கிளைக ளுடனே கெழுமித் துய்த்தே
அன்பு பெருகி அகமிக மகிழ்ந்து
மன்னுயிர் யாவும் இன்புறும் வண்ணம்
மன்னனுக் கடிமை மக்கள் எனாது
மன்னன் ஊழியன் மக்களுக் கென்ன
உரிமை காத்து உடைமை காத்துப்
பரிவோ டின்சொல் பகர்ந்து போற்றிக்
குடிகள் மனத்துக் கொண்ட கருத்தை
நெடிது நோக்கி நெறியும் நோக்கி
மிக்க இன்பமும் மேவு துன்பமும்
ஒக்கக் கொண்டுள் உறுதி யோடு
தக்கன புரிந்து தகவில ஒழித்து
மய்க்கடல் சூழ்ந்த வையகம் தன்னில்

தன்னுயிர் போல மன்னுயிர் காக்கும்
மன்னவர் செங்கோல் மன்னி ஓங்க
இன்னருள் செய்வாய் மன்னருள் செய்வாய்
என்மனத் துள்ள யாவையும் உள்ளங்
கய்க்கனி போலக் காணுவை அவைபெற்(று)
ஒக்கலும் மக்களும் ஒருங்கின் புற்று
மருமலர் தூவி வழாது நாளுநின்
திருவடி வழுத்தத் திருவருள் தருவாய்
அன்பும் வாழிநின் அருளும் வாழி
இன்புறும் அடியார் இனமுற வாழி
ஆழி வாழி வாழிவெண் சங்கம்
ஊழி ஊழி வாழிய செந்தமிழ்
தாமரை அனைய தாளிணை வாழி
பூமகள் நிலமகள் பொலிவுற வாழி
வாழி வாழியிவ் வையகம்
வாழி நின்புகழ் வாழி வாழியே.

## திருவாய்மொழி

பற்பநாபன் உயர்வற உயரும் பெருந்திறலோன்
எற்பரன் என்னையாக்கிக்கொண்டு எனக்கேதன்னைத்தந்த
கற்பகம் என்அமுதம் கார்முகில்போலும் வேங்கடநல்
வெற்பன் விசும்போர்பிரான் எந்தை தாமோதரனே.

ஆழ்வார் திருவடிகளே சரணம்